
www.padippakam.com

# தமிழர் விளையாட்டுக் கழகம்



1996

பேர்கன், நோர்வே

படிப்பகம்

www.padippakam.com


படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் விளையாட்டுக் கழகம்





## பத்தாவது ஆண்டு நிறைவு மலர்





**1996**







**பேர்கன், நோர்வே**

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளுறை


| | |
|---|---|
| கழகத் தலைவரிடமிருந்து . . . | 1 |
| தமிழர் விளையாட்டுக் கழகத்தின் தோற்றமும், வரலாறும் | 4 |
| வாழ்த்துச் செய்தி | 8 |
| சிறப்பு விருது | 11 |
| வாழ்த்துச் செய்தி | 13 |
| வாழ்த்துரை | 14 |
| நேர்காணல் | 15 |
| பந்தயக் குதிரைகள் | 21 |
| பெண்களும் விளையாட்டும் | 31 |
| ஒலிம்பிக் போட்டிகளும் சரித்திர நிகழ்வுகளும் | 34 |
| விளையாட்டுக் கலை | 39 |
| Sportsmanship | 41 |
| ஆசிரியுரை | 43 |



**மலர் வெளியீட்டுக்குழு**
யூஜின் செபஸ்ரியன்
எஸ்தாக்கி ஜெயராஜ்
அன்ரனிப்பிள்ளை யூலியஸ்

**நூல் வடிவம்**
பிரான்சிஸ் ஞானநாயகம்

**முகப்போவியம்**
றெஜி பிரபாகரன்

**வெளியீடு**
Tamilenes Sports Klubb
Postboks 4388, Nygårgstangen
5028 BERGEN


படிப்பகம்

www.padippakam.com

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுள் ஒரு பகுதியினர் ஏழு மலைகளால் சூழப்பட்ட பேர்கன் நகரிலும் குழுமினர்.


இங்கு அரசியல் சார்பற்ற சில அமைப்புக்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

இன்று பெரும்பாலான மக்களை ஒன்றுகூட்டும் ஊடகங்களுள் முதன்மை வகிப்பது விளையாட்டுக் கழகம் என்றே கூற வேண்டும்.

பேர்கனிலுள்ள தமிழர் விளையாட்டுக் கழகம் 1985ம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்களை கடந்து விட்டது.

இளைஞர்கள், யுவதிகள், பெரியவர்கள், சிறுவர்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தும் இக் கழகமானது 1993ம் ஆண்டில் ஹோடலாண்ட் மாநகரிலே சிறந்த கழகம் என சிறப்பு விருது பெற்றது.

படிப்பகம்


Sports club 10 years

www.padippakam.com

# கழகத் தலைவரிடமிருந்து. . .



– யூஜின் செபஸ்ரியன்–

அன்பின் தமிழ் மக்களே!

எங்களது விளையாட்டுக்கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவை நாங்கள் கொண்டாடும் இவ்வேளையில் எவ்வளவோ சிரமங்களுக்கூடாக இந்தக் கழகத்தை நடாத்திய உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் ஆசியும் உரித்தாகுக. இக்கழகத்தை எவ்வாறு பொதுமக்கள் அனைவரும் தொடர்ந்தும் அங்கீகரிக்கக் கூடிய முறையில் நடத்தலாம் என்பதை பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். அத்துடன் இளைஞர்கள் எவ்வாறு எங்கள் கழகத்தில் தொடர்ந்தும் ஆர்வத்துடன் பங்குபற்றலாம் என்பதைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

ஒரு நாடு இயங்குவதற்கு அரசாங்கம் என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஒரு கழகம் இயங்குவதற்கு ஒரு நிர்வாக சபை முக்கியமானதாகும். நிர்வாக சபையில் இருக்கும் அங்கத்தவர்கள் பேச்சளவில் மட்டும் கழகம் வளர வேண்டும் என்பவர்களாக இல்லாமல் அதை செயலிலும் காட்ட முயற்சி எடுக்க வேண்டும். பொதுக் கூட்டங்களிலும் நிர்வாக சபைக் கூட்டங்களிலும் நாங்கள் கருத்துக்களை கூறிக் கொண்டு மாத்திரம் இருக்கின்றோமே அன்றி செயல்முறைப்படுத்துவதற்கு வேண்டிய செயல்களை செய்வதில்லை. புதிய திட்டங்ளை அல்லது நடைமுறையில் உள்ளவற்றை சிறப்பாக செயற்படுத்துவதற்கு நிர்வாக சபை அங்கத்தவர்கள் மட்டுமன்றி பொது அங்கத்தவர்களும் உதவி செய்வது முக்கியமானதாகும். நாங்கள் கதையிலே காலத்தை கடத்தாமல் செயலில் இறங்கினால் கழகம் முன்னேறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. பொதுச் சபையின் கடமைகளில் ஒன்றானது

படிப்பகம்

www.padippakam.com

என்னவெனில் நிர்வாக சபையொன்றை தெரிவு செய்வது. தெரிவு முடிந்ததும் பொதுச் சபை அங்கத்தவர்கள் தங்கள் கடமை முடிந்ததாக எண்ணுவது சகஜம். இங்குதான் அங்கத்தவர்கள் பிழை செய்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தங்களது மற்றைய கடமைகளை மறந்து போகிறார்கள். ஒரு நிர்வாக சபை சரிவர இயங்குவதற்க்கு பொதுச் சபை அங்கத்தவர்களே முக்கியமானவர்கள். நிர்வாக சபையானது பிழைவிடும் பட்சத்தில் தகுந்த காரணத்துடன் அப்பிழைகளை சுட்டிக்காட்டி அவற்றை திருத்த முன்வரவேண்டும். உதவி தேவைப்படும் போது உதவ வேண்டும். எம்மத்தியில் நிலவுவது என்னவெனில் வேண்டாவெறுப்புத் தன்மை, கழகம் எவ்வாறு நடந்தாலும் எனக்கென்ன என்பதாகும். ஆகையால் பொதுச் சபை அங்கத்தவர்களும் நிர்வாக சபையினரும் ஆர்வம் காட்டுவதோடு செயல்முறைகளிலும் இறங்கவேண்டும்.

இளைஞர்களை கழகம் கவர வேண்டுமாயின் இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கழகத்தின் செயற்பாடுகள் இருக்க வேண்டும். நோர்வேயில் தமிழ் பெற்றோர்களுக்கு பிறந்த பல இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களை கவரக் கூடியதாக கழகம் இயங்க வேண்டும். நாங்கள் வளர்ந்த கலாச்சாரத்திற்கும், இங்கு பிள்ளைகள் வளரும் கலாச்சாரத்திற்கும் வித்தியாசங்கள் பல உள்ளன. எமது நாட்டில் நடப்பது போல் அல்லாமல் பிழைகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை விவாதிக்க வேண்டிய இடத்தில் விவாதித்து திரும்பவும் அவ்வாறான பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்குரிய வழிவகைகளை கையாள வேண்டும். அப்பொழுது தான் இளைஞர்களுக்கு எங்களில் நம்பிக்கை ஏற்படும். அதுமட்டுமல்லாமல் பொதுச் சபைக் கூட்டங்களில் இளைஞர்களும் எங்களைப்போல் அங்கத்தவர்கள் என்பதை மனதில் கொண்டு அவர்களுடன் கருத்து பரிமாறப்பட வேண்டும்.

இவ்வருடம் வரை நாங்கள் விளையாட்டுக்களை ஒரு பக்கசார்பாக நடாத்தி வந்திருக்கின்றோம். இவைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக உதைபந்தாட்ட போட்டிகளை கிண்ணப்



படிப்பகம்

போட்டியாக (Cup) நடத்தலாம். அதாவது வெல்லும் அணிக்கு அந்த வருடம் அளிக்கப்படும் கிண்ணம் சொந்தமாகும். அவ்வாறே கரப்பந்தாட்ட போட்டியையும் நடத்தலாம். நிர்வாக சபையில் பெண்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். எங்கள் சமுதாயத்தில் சிறு பிள்ளைகளுக்கு கிழமையில் ஒரு முறையாவது உதைபந்தாட்ட பயிற்சிகளை நடாத்தி போட்டிகளை விரிவான முறையில் நடத்தலாம். இதற்கு ஒரு ஆர்வமான நடைமுறைபடுத்தக் கூடிய ஒருவரை நியமிக்கலாம். இதற்கு நிர்வாக சபையிடம் மாத்திரமின்றி பெற்றோர்களிடமிருந்தும் உதவியை எதிர்பார்க்க வேண்டும். இலங்கையில் எத்தனையோ விதமான விளையாட்டுக்கள் உள்ளன. அதற்காக அவை எல்லாவற்றையும் செயல்படுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆயினும் முக்கியமான விளையாட்டுக்களாக Badminton, Carrom, Table-tennis ஆகியவற்றை சேர்த்துக் கொள்ளலாம். இவைகளை ஆரம்பிப்பதாகவிருந்தால் பணம் முக்கியம் என்பதை நான் நன்கறிவேன். ஆயினும் இவ்விளையாட்டுக்களை எமது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டும். இதை உடனடியாகசெய்வதல்ல என் நோக்கம். இவை காலப்போக்கில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது அவா!

இறுதியாக கழகத்தை கட்டி எழுப்புவதற்கும் கழகத்தை கடந்த பத்து வருடங்களாக நடாத்த உதவிய சகல நிர்வாக சபை அங்கத்தினருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம். அவர்கள் மட்டுமன்றி கழகத்தின் அங்கத்தவர்களுக்கும், அங்கத்தவர்களாக அல்லாமல் வெளியில் நின்று இக்கழகம் வளருவதற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம். இக் கழகம் மேலும் பல்லாண்டு காலம் இங்கு வாழும் எமது தமிழ் சமுதாயத்திற்கு விளையாட்டுச் சேவை மூலம் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்க்கும் ஒரு கழகமாக செயற்படவேண்டும் என்று ஆசி கூறிக் கொண்டு முடிக்கின்றேன்.

வாழ்க தமிழர் விளையாட்டுக் கழகம்.

வாழ்க கழகத்தின் நடுநிலைமை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் விளையாட்டுக் கழகத்தின் தோற்றமும், வரலாறும்

1985ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் பேர்கன் வாழ் தமிழ் மக்களின் விருப்பத்தின் காரணமாக இங்கு வாழ்ந்த உதைபந்தாட்ட வீரர்கள் ஒரு உதைபந்தாட்ட அணியை உருவாக்கி நோர்வீஜிய, வெளிநாட்டு உதைபந்தாட்ட அணிகளுடன் போட்டி போட்டு விளையாடி வந்தார்கள். அதன் காரணமாக 1985ம் ஆண்டில் எமது உதைபந்தாட்ட அணியை சட்டபூர்வமாக Football krets ல் பதிவு செய்து விளையாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பேர்கனில் வாழ்ந்த உதைபந்தாட்ட ஆதரவாளர்களால் Fantoft என்ற பெயருடன் உதைபந்தாட்டத்திற்கென ஒரு விளையாட்டுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அப்பொழுது பேர்கனில் இயங்கி வந்த அமைப்புக்களான ஈழத் தமிழர் சங்கம், ஈழத்தமிழர் மாணவர் சங்கம் ஆகியன தங்களது ஒத்துழைப்பை நல்கின. இது தமிழ் மக்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்குமிடையில் நட்புறவை வளர்க்க பெரிதும் உதவியது.

1988ம் ஆண்டு ஈழத்தமிழர் சங்கத்தின் முயற்சியால் பேர்கன் வாழ் தமிழ் மக்களிடையே கோடை காலத்தில் விளையாட்டுக்களில் ஆர்வத்தையும், வளர்ச்சியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துமுகமாக ஈழத் தமிழர் சங்கம், ஈழத் தமிழர் மாணவர் சங்கம், Fantoft விளையாட்டுக் கழகம் மூன்றும் ஒன்று சேர்ந்து 1988ம் ஆண்டு கோடை காலத்தில் ஒரு குழுவை அமைத்து, கோடை கால விளையாட்டுக்களாக உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் ஆகியனவும் ஏனைய விளையாட்டுக்களாக ஓட்டப் போட்டி, பாய்தல், குண்டெறிதல், துவிச்சக்கர வண்டி ஓட்டம், தடையோட்டம், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகளை ஆண் பெண் இருபாலாருக்கும் சிறுவர்களுக்கும் இடையே நடத்தியது. குழு விளையாட்டுக்களுக்கு நான்கு பூகோளப் பிரிவாக Fantoft, Town,



படிப்பகம்

www.padippakam.com

Bergen Vest, Åsane என பிரிக்கப்பட்டு Fantoft குறிச்சிக்கு சிவப்பு நிறமும் புறா சின்னமும், Town குறிச்சிக்கு பச்சை நிறமும் மீன் சின்னமும், Bergen Vest குறிச்சிக்கு நீல நிறமும் சூரியன் சின்னமும், Åsane குறிச்சிக்கு மஞ்சள் நிறமும் கலப்பை சின்னமும் வழங்கப்பட்டு கோடை கால விளையாட்டுக் குழுவினால் 91ம் ஆண்டு வரை மக்களின் ஒத்துழைப்புடன் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

1992ம் ஆண்டு Fantoft கழகம் Football krets ல் இருந்து விலகி கழக உறுப்பினர்களின் ஏகோபித்த சம்மதத்துடன் தமிழ் மக்களுடைய விளையாட்டுக்களை பொறுப்பெடுத்து நடத்துவதாக முடிவெடுத்ததன் காரணமாக Fantoft கழகம் என்ற பெயர் மாற்றப்பட்டு ஏனைய சங்கங்களின் சம்மதத்துடன் விளையாட்டுக்களை நடாத்தும் பொறுப்பு தமிழர் விளையாட்டுக் கழகம் என்ற புதிய பெயரில் தமிழர் விளையாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

1989ம் ஆண்டு Bergen Vest குறிச்சி மக்களால் குளிர்காலங்களில் மக்களை உற்சாகப்படுத்தும் முகமாக உள்அரங்கு விளையாட்டுக்களான உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய இரண்டும் Bergen Vest குறிச்சி மக்களின் ஒத்துழைப்புடன் அவர்களால் அமைக்கப்பட்ட குழுவும் கோடைகால விளையாட்டுக் குழுவும் சேர்ந்து இவ் விளையாட்டுக்களை நடத்தின. இதற்கு கோடை கால குழுக்களின் முறையிலேயே குறிச்சிகள் பங்குபற்றின. இதற்கும் பேர்கன் வாழ் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு பூரணமாக தரப்பட்டது. வெற்றிக் கிண்ணங்களை Bergen Vest குறிச்சி மக்களே வழங்கி சிறப்பித்தார்கள். பேர்கன் வாழ் தமிழ் மக்களது வேண்டுகோளுக்கிணங்க இவ்விளையாட்டுக்களை 92ம் ஆண்டுவரை தமிழர் விளையாட்டுக் கழகத்தின் தலைமையில் பொறுப்பேற்று நடத்தி வந்தது. 92ம் ஆண்டிலிருந்து தமிழர் விளையாட்டுக் கழகம் தானே பொறுப்பெடுத்து இன்று வரை திறமையாக நடத்தி வருகின்றது.

Åsane குறிச்சியில் இயங்கும் City Nord என்னும்



படிப்பகம்

www.padippakam.com

துடுப்பெடுத்தாட்ட அணியில் விளையாடும் வீரர்கள் சிலரின் முயற்சியால் **Bergen Cup** துடுப்பெடுத்தாட்டம் 1991ம் ஆண்டு நோர்வேயில் வாழும் இலங்கை மக்களிடையே பேர்கனில் கோடைகால விளையாட்டுகளுக்கென செயல்பட்ட விளையாட்டுக் குழுவின் ஆதரவுடன் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டி பேர்கன் மக்களிடையில் மாத்திரமல்ல நோர்வே வாழ் இலங்கை மக்களிடையே ஒரு ஒற்றுமையையும் நட்பையும் வளர்க்கும் விதத்தில் அமைந்தது வரவேற்கத்தக்கது. Bergen Cup துடுப்பெடுத்தாட்டப் போட்டியும் 1993ம் ஆண்டிலிருந்து தமிழர் விளையாட்டுக் கழகத்தினால் முழுமையாக பொறுப்பேற்கப்பட்டு தொடர்ந்து இயன்றவரை திறமையாக ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது. இவ்வருடத்துடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

FR. David ஞாபகார்த்த சுற்றுப் போட்டிகள் 1991ம் ஆண்டு பேர்கன் வாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு கோடைகால விளையாட்டுக் குழுவினரின் ஒத்துழைப்புடன் Badminton, Tabletennis, Chess, Carrom ஆகிய விளையாட்டுக்கள் நடத்தப்பட்டது. அதை திறம்பட நடத்தி முடிப்பதில் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் பூரண ஒத்துழைப்பை நல்கினார்கள். 1993ம் ஆண்டு வரை புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களுடன் சேர்ந்து தமிழர் விளையாட்டுக் கழகம் இவ்விளையாட்டுக்களை திறமையாக நடத்தியுள்ளது. தற்போது பொறுப்பில் இருக்கும் தமிழர் விளையாட்டுக் கழக நிர்வாகம் இவ் விளையாட்டுக்களை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்து நடத்த ஆலோசித்து வருகின்றது.

Hordaland மாநகர சபையினால் வருடாவருடம் வழங்கப்படும் சிறுவர் இளைஞர்களுக்கான சிறப்பு விருது 1993இல் தமிழர் விளையாட்டு கழகத்திற்கு கிடைத்தது. இதன்மூலம் Hordaland மாநகரிலேயே சிறந்த கழகம் என்ற பட்டம் இக்கழகத்திற்கே கிடைத்தது.

தமிழர் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட வீரர்களின் விருப்பத்தின் பேரில் ஒஸ்லோவில் நடைபெறும் நோர்வே உதைபந்தாட்ட போட்டியிலும்



படிப்பகம்

www.padippakam.com

தமிழர் விளையாட்டு கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு தமது திறமையான விளையாட்டால் ஒஸ்லோ மக்களின் வரவேற்பையும் பெற்று தொடர்ச்சியாக விளையாடி வருவது பேர்கன் வாழ் மக்களின் ஒத்துழைப்பையும், விளையாட்டு ஆர்வத்தையும் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர் விளையாட்டுக் கழகம் தனது பத்து ஆண்டுகால வரலாற்றில் படிப்படியாக வளர்ந்து இன்று முழுமையாக பேர்கன் வாழ் தமிழ் மக்களிற்கும், நோர்வேயில் வாழும் இலங்கை மக்களிற்கும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி மக்களது ஆதரவை பெற்று வருகிறது.

*தொகுப்பு:*
*எஸ்தாக்கி ஜெயராஜ்*





படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துச் செய்தி

- க.மமில்வாகனம்–

பேர்கன் வாழ் தமிழரனைவருக்கும் முதற்கண் என் அன்பு கனிந்த வணக்கங்கள்.

தமிழர் விளையாட்டுக்கழகம் தனது பத்தாவது வருட நிறைவை ஒட்டி விழா எடுப்பதை அறிந்து மிக மகிழ்கிறேன். கழகம் இக்குறுகிய காலத்தில் நன்கு வளர்ந்ததையிட்டு அதன் காரணகர்த்தாக்களுக்கு என் உளம் நிரம்பிய பாராட்டுகள் உரித்தாகுக.

நம்மிடையே சிலர் ஒரு விடயத்தின் தன்மையைக் குறைத்துக்கூறும் நோக்குடன் அதனை “விளையாட்டு விடயம்” என்று கூறும்போது நான் மிகவும் வியப்படைவதுண்டு. விளையாட்டின் அருமை, பெருமை, மகிமை தெரியாது அப்படிக் கூறப்படுகிறது என நான் கருதுகிறேன். உண்மையில் அந்த சொற்றொடர் தமிழ் வழக்கில் வந்திருக்கவே கூடாது என்பது எனது தாழ்மையான கருத்தாகும். அது விளையாட்டின் பெருமைக்கு ஓர் பெரும் இழுக்காகும்.

விளையாட்டு மனிதர்க்கு மட்டுமென்று வரையறுக்கப்பட்டதொன்றல்ல. கல் தோன்றி மண் தோன்றிப் பின் உயிரினங்கள் தோன்றிய காலம் தொட்டு நடமாடும் உயிரினங்களிடையே விளையாட்டு இயற்கையாகவே ஏற்பட்டிருந்ததை நாமறிவோம். இயற்கைப் படைப்புக்கள் அனைத்தும் தெய்வீகத்தன்மை வாய்ந்தனவாகும். இயற்கை எதை உருவாக்கினாலும் அது அத்தியாவசியமானதாகவே இருக்கும். அனாவசியமானதை இயற்கை ஒரு போதும் உருவாக்குவதில்லை. அப்பிழையை மனிதனே செய்கிறான். உயிரினங்களின் தேக சௌகரியத்திற்கு தேகப்பியாசம் இன்றியமையாதது. இதை இயற்கை விளையாட்டு வடிவத்தில் தந்துள்ளது. உதாரணமாக மிருகங்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றைவிட்டு ஒன்று துரத்துவது, கலை மான்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வது, குட்டிநாய் தன் தாயின் வாலைக் கடிக்க, தாய் பொய்க் கோபம் கொண்டு தன் குட்டியை விரட்ட குட்டி சிறிது தூரம் ஓடிச்சென்று மீண்டும் அவ்விளையாட்டில் ஈடுபடுவதை நாம் பன்முறை கண்டுள்ளோம். எனவேதான் நான் விளையாட்டை தெய்வீகத்தன்மை வாய்ந்ததென மேலே கூறினேன்.

கிறீஸ்தவ, பௌத்த, இந்து மத பீடங்களில் கூட, தேகப்பியாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை நாம் அறிவோம். வேதாந்திகள், ஞானிகள், முனிவர்கள் கூட யோகாசன முறைகளை ஒழுங்கே ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே. யோகாசனம் இப்போ மேற்கத்திய நாடுகளிலும் மிகவும் பிரசித்தி அடைந்துள்ளது. சில நோய்கள் கூட யோகாசனங்களால் குணப்படுத்தலாமென கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஏன் சாட் சாத் புத்த பகவான் அமர்ந்திருக்கும் இலட்சணத்தை யோகாசன ரீதியில் நோக்குகையில் அதனை பத்மாசனம் என அழைக்கப்படும்.

தொட்டில் குழந்தைக்கு கூட கிலுகிலுப்பையைக் குலுக்கித் தாயானவள் விளையாட்டுக் காட்டி குழந்தையைச் சாந்தப் படுத்துகிறாளல்லவா? இந்த விளையாட்டின் மகிமை தான் என்னே?

எனவே இவ்வளவு முக்கியத்துவமும், பெருமையும், மதிப்பும் வாய்ந்த விளையாட்டை எள்ளி நகையாடலாமா? அது புனிதமானதன்றோ?

பேர்கனின் கால நிலையின் நிமித்தம் தனி மனிதன் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் கடினம். எனவே அக்குறையை நிவர்த்தி செய்வதுடன் பேர்கன் வாழ் தமிழ் மக்களிடையே அன்பு, நட்பு, அந்நியோன்யம் ஆகியவற்றையும் சமூக வளர்ச்சியையும் தங்கள் விளையாட்டுக் கழகம் உருவாக்கியுள்ளது. இத்தொண்டு புனிதமானது என்பதை உணர்ந்து இக்கழகம் மேலும் விரிவுற சகலரும் ஆவன செய்ய



படிப்பகம்

www.padippakam.com

முன் வர வேண்டும்.

இறுதியாக ஓர் வேண்டுகோள். தங்கள் கழகம் தமிழ் சிறார்களையும் அரவணைத்து இவர்களுக்கு கிரமமான பயிற்சிகளும், வருடாந்தப்போட்டிகளும் நடாத்துதல் சாலச் சிறந்தது. இதனால் குழந்தைகட்கு நன்மையூட்டுவது மட்டுமல்ல கழகத்தில் அச்சிறாரினது பெற்றோரின் ஈடுபாடு கூடி கழக வளர்ச்சிக்கும் அது வழிவகுக்கும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயமாகும். இதற்கான ஏற்பாடுகளை கழக நிர்வாகிகளுடன் இணைந்து சிறார்களின் பெற்றோர் செயல்பட முயல வேண்டும்.

தமிழர் விளையாட்டுக் கழகம் மேலோங்கி வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வாழ்க தமிழர் விளையாட்டுக் கழகம்.

வாழ்க செந்தமிழ், வாழ்க தமிழினம்.



படிப்பகம்

www.padippakam.com

## 1993இல் கழகத்திற்கு சிறப்பு விருது

Hordaland மாநகர சபையினால் வழங்கப்படும் சிறுவர் இளைஞர்களுக்கான விருது 1993ம் ஆண்டில் தமிழர் விளையாட்டு கழகத்திற்கு கிடைத்தது. இவ்விருதை கழகத்தின் தலைவர் திரு யூஜின் செபஸ்ரியன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்விருது கழகத்திற்கு கிடைப்பதற்கு முக்கிய காரணங்கள் சில உண்டு.

- 1985ம் ஆண்டிலிருந்து தமிழ் சிறுவர்கள், இளைஞர்களை ஒருமுகப்படுத்தி விளையாட்டின் மூலம் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்த்தமை.
- இலங்கையில் தமிழ்–சிங்கள இன மக்களுக்கிடையில் அரசியல் ரீதியாக நீண்டகால பிரச்சனை இருப்பினும் விளையாட்டின்பால் ஒற்றுமையை வளர்க்க கழகம் முயற்சித்து வெற்றியும் கண்டுள்ளது. குறிப்பாக Bergen Cup துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் சிங்கள அணியொன்றிற்கும் அழைப்புவிடுத்து, அவர்களையும் நண்பர்களாக அணைத்து விளையாடியமை.

இவ்வாறான விடயங்களே கழகத்திற்கு கிடைத்த விருதிற்க்கு மிகப் பெரிய காரணங்களாகும்.

1993ம் ஆண்டில் Hordalandஇலுள்ள 14 அமைப்புகள் இவ்விருதிற்கு முன்மொழியப்பட்டிருந்தனர். இவற்றிலிருந்து தமிழர் விளையாட்டுக் கழகமே விருதிற்காகத் தெரிவு செய்யப்பட்டு விருதுக் குழுவின் தலைவரான Anne Angel-tveit அவர்கள் விருதை வழங்கினார்கள்.

இவ்விருது தமிழர் விளையாட்டுக் கழகத்திற்க்கு கிடைத்ததையிட்டு பேர்கன் தமிழர் சங்கமும், பேர்கன் தேன் தமிழ் ஓசை வானொலியும் கழகத்தை கௌரவித்து இது பேர்கன் வாழ் அனைத்து தமிழர்களுக்குமே கிடைத்த விருது எனவும் பாராட்டினர்.



படிப்பகம்

www.padippakam.com



**PRIS:** *Anne Angeltveit fra Hordaland Barne og Ungdoms Råd var glad for å kunne gi lederen for Tamilenes Sportsklubb, Eugene Sebastian, Barne og Ungdomsprisen for 1993.*

FOTO: FRED IVAR KLEMETSEN

# Ærespris til tamilene

I går ble Tamilenes Sportsklubb tildelt Barne og Ungdomsprisen for 1993. Hordaland Barne og Ungdoms Råd mener Tamilene fortjener prisen for arbeidet de har gjort for å dempe konflikter blant tamiler og singalesere i Norge.

På Sri Lanka er det kamp mellom singalesere og tamiler. Men i Bergen kan de to folkegruppene møtes på en fredelig måte. I fjor sommer inviterte Tamilenes Sportsklubb singalesere fra Oslo til å delta i sitt årlige cricketmesterskap her i Bergen. De to folkegruppene spilte mot hverandre, uten konflikter.

Det vet juryen å sette pris på.

– Dette er en anerkjennelse for vårt arbeid blant tamilske barn og ungdom i Bergen, sier Eugene Sebastian. Han er leder for Tamilenes Sportsklubb. Sportsklubben har vært i Bergen de siste ni årene.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துச் செய்தி

பத்தாவதாண்டில், சித்து நடைபயின்றுவரும்
முத்தான எம் தமிழர், விளையாட்டுக் கழகமே நீ
எண்பத்து ஆறில்,இளம் சிசுவாய்த் தான் பிறந்து
ஏழாவது வயதில், இணையற்ற பேர் எடுத்தாய்
ஹோர்டலாண்ட் வாழ் தமிழர், குதாகலித்து மகிழ்வு கொள்ள
பேர்கனிலே எங்கள் இனப்,பெருமையைக் காட்டி நின்றாய்
வித்தையாம் விளையாட்டின்றி, வீரமும் வளர்ந்திடுமோ
உடற்பயிற்சி இல்லாமல், உள்ளம் உரம் பெற்றிடுமோ
கற்றவரும் மற்றவரும், உற்றவரும் உன் திறமை
முற்றிலும் ஓங்கிடவே, முத்தாரம் சூடுகின்றோம்
சிறப்புகள் பெற்றுனது, சீர் இளமை பொலிவுறவே
வரப்புக்குள் அடங்காத, வளம் பெறவே வாழ்த்துகின்றோம்
வாழ்க நீ புகழோடு, வளர்க நீ உரமோடு
வாழ்க வாழ்க வாழ்கவென, மனமுவந்து வாழ்த்துகின்றோம்

மறத் தமிழர் மன்றத்தோர் (சங்கத்தோர்) யாம்
மகிழ்வுடனே வாழ்த்துகின்றோம்.
மங்காத புகழோடு
எம் கழகம் நீ வாழ்க !

ஈழத் தமிழர் சங்கம்
பேர்கன்
நோர்வே



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துரை

பேர்கன் தமிழர் விளையாட்டுக் கழகமே
தசமம் முடித்த உன் நிலை கண்டு
பாலர் பாடசாலை சிறுவர் ஆசிரியர்
பல்லாண்டு உன் சேவை நிலைக்க
பாசமுடன் வாழ்த்துகின்றோம்.

ஓடி விளையாட ஓர் விளையாட்டு
கூடி விளையாட ஓர் விளையாட்டு
பாலர் நாம் பங்கெடுத்தோம்
பார்த்துப் பார்த்து களித்திருந்தோம்.

கடல் கடந்து வந்த போதும்
கைவிடாத உன் சேவை
பாரதி கண்டிருந்தால் இன்று
பாடிடுவான் பாக்கள் பல.

பாலர் நாம் தந்திட்டோம் பாக்கள் சில.

**பேர்கன் தமிழ் சிறுவர் பாடசாலை.**



படிப்பகம்

www.padippakam.com

# நேர்காணல்கள்:

பேர்கன் வாழ் தமிழ் மக்களை குறிச்சி ரீதியாகப் பிரித்து கோடைகால குளிர்கால விளையாட்டுப் போட்டிகளும், நோர்வேயிலுள்ள அணிகளுக்கிடையில் **Bergen Cup** துடுப்பெடுத்தாட்ட போட்டியும், உள்அரங்க விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

1988ம் ஆண்டு பேர்கனிலிருந்த தமிழர் சங்கம், தமிழ் மாணவர் சங்கம், தமிழர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து கோடைகால விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்தன. தற்போது தமிழர் விளையாட்டுக் கழகம் மட்டுமே நடாத்தி வருகிறது.

குளிர்கால விளையாட்டுப் போட்டிகளையும், **Bergen Cup** துடுப்பெடுத்தாட்டப் போட்டியையும், உள்அரங்க விளையாட்டுப் போட்டிகளையும் பேர்கனில் ஆரம்பிப்பதற்கு காரணமாகவிருந்த மூன்று உறுப்பினர்களுடனான சந்திப்பு.

1989ம் ஆண்டில் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளென உதைபந்தாட்ட போட்டிகளும், கரபந்தாட்ட போட்டிகளும் Fyllingsdalen Idretssal இல் ஆரம்பமாகியது. இப் போட்டிகளை நடத்துவதற்கு Bergen Vest மக்களிடமிருந்தே கருத்து வெளிப்பட்டது. இதன் அடிப்படையில் அப்பகுதியைச் சேர்ந்த திரு நிச்மண்ட் மனுவல் அவர்களுடனான நேர்காணல்.

- குளிர்கால விளையாட்டுப் போட்டிகளென உதைபந்தாட்ட போட்டிகளும், கரபந்தாட்ட போட்டிகளும் உள்அரங்கில் நடத்துவதற்கு Bergen Vest மக்களிடமிருந்தே கருத்து வெளிப்பட்டதாக தெரிகிறது. இப் போட்டிகள் ஆரம்பமானது தொடர்பாக . . . . .

○ பேர்கனிலுள்ள மக்களிற்கு குளிர்காலத்தில் எவ்விதமான விளையாட்டுக்களும் தெரிவு இருக்கவில்லை. இந்நிலை வீரர்களை



படிப்பகம்

www.padippakam.com

சோம்பேறிகளாக்கும் என Bergen Vest மக்கள் ஒன்று சேர்ந்து குளிர்காலத்தில் மண்டபத்தினுள் உதைபந்தாட்ட, கரபந்தாட்டப் போட்டிகளை நடத்தலாம் என தீர்மானித்தோம். அவ்வேளையில் தமிழர் விளையாட்டுக் கழகம் எம்மையணுகி விளையாட்டுகளுக்கென ஒரு கழகம் இருக்கின்றது, தனிப்பட்டவர்கள் நடாத்துவது நல்லதல்ல என்று கருத்து தெரிவித்தார்கள். Bergen Vest மக்களுக்கும் தனித்துப் போட்டிகளை நடாத்தும் நோக்கம் இருக்கவில்லை. முக்கியமாக Challenge Cup தனிப்பட்டவர்களுடையதாக இருக்கக்கூடாது, போட்டி ஒரு வருடத்துடன் நின்றுவிடக் கூடாது அதனால் பொது அமைப்பு நடாத்துவதே சிறந்தது என முடிவு எடுத்தோம். இருந்தும் முதல் வருடம் 1989ம் ஆண்டு எமது தலைமையில் கழகத்தின் உதவியுடனேயே மிகச்சிறப்பாக போட்டிகள் நடாத்தப்பட்டது. தொடர்ந்து ஆறு வருடங்களாக தமிழர் விளையாட்டுக் கழகம் நடாத்தி வருகின்றது.

- **விளையாட்டு வீரர்கள், பார்வையாளர்கள் மத்தியில் குளிர்கால விளையாட்டுக்களில் ஆரம்பத்தில் இருந்த உற்சாகத்திற்கும் தற்போதுள்ள நிலைக்கும் என்ன வித்தியாசமென நினைக்கின்றீர்கள்?**

○ ஆரம்பத்தில் வீரர்கள் பார்வையாளர்கள் மத்தியில் இருந்த உணர்ச்சிபூர்வமான பங்களிப்பு தற்போது இல்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

❖ ஆரம்பத்தில் உற்சாகமாக இருந்த பல சிறந்த வீரர்கள் பேர்கனிலிருந்து வெளியேறியமை.
❖ குறிச்சிகளின் ஒத்துழைப்பின்மை.
❖ பார்வையாளர்களின் பங்களிப்பின்மை, ஒழுங்கீனம்.

இவை தற்போதுள்ள வீரர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருவதானால் வித்தியாசமாக உணர்ச்சி பூர்வமாக மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

- **வித்தியாசமாகவென்றால் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?**

○ சிறுவர்களின் விளையாட்டுக்களைக்கூட்டுதல். பெண்களுக்கான போட்டிகளை



படிப்பகம்

www.padippakam.com

- சிறுவர்களின் விளையாட்டுக்களைக்கூட்டுதல். பெண்களுக்கான போட்டிகளை நடாத்துதல் அத்துடன் குறிச்சிப் பொறுப்பாளர்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும். ஒஸ்லோவில் விளையாடும் வீரர்கள் உற்சாகத்துடன் விளையாடுகின்றார்கள் காரணம் பார்வையாளர்கள் கூடுதலாக வருகின்றார்கள். அவ்வாறு இங்கும் பார்வையாளர்கள் மைதானத்திற்கு போட்டியின் போது வரவேண்டும். அதற்குப் போதுமான அளவு அறிவித்தல்கள் வழங்கவேண்டும்.

. . . .

1991இல் பேர்கனில் **Bergen Cup** துடுப்பெடுத்தாட்டப் போட்டி ஆரம்பமாகியது. நோர்வேயின் பல பாகங்களிலும் இருந்து விளையாட்டு அணிகள் வந்து பங்குபற்றிச் செல்கின்றன. குறிப்பிட்டுச் சொல்வதானால் 1991இலிருந்து ஒஸ்லோவிலிருந்து **Busy Bees** என்ற சிங்கள வீரர்களையும் உள்ளடக்கிய அணியொன்று பங்குபற்றி வருகின்றது. **Bergen Cup** துடுப்பெடுத்தாட்ட போட்டி ஆரம்பமாகுவதற்கு **City Nord** வீரர்களே காரணமாகவிருக்கின்றனர். அவர்களுள் ஒருவரான திரு சூரியுடன் ஓர் நேர்காணல்.

- Bergen Cup துடுப்பெடுத்தாட்டப் போட்டியை நீங்கள் ஆரம்பித்ததன் நோக்கம் என்ன?

- பேர்கனில் குறிச்சி ரீதியாகப் போட்டிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. இங்குள்ளவர்களிடம் துடுப்பெடுத்தாட்டத்தில் கூடுதல் ஆர்வம் இருந்தது. அதனால் எம்மில் சிலர் பேர்கன் தவிர்ந்த வேறு பல இடங்களிற்கு சென்று விளையாடினோம். மற்றைய இடங்களிலும் நல்ல ஆர்வத்தைக் கண்டோம். இருந்தாலும் மற்றைய இடங்களில் போட்டிகள் நடைபெற்ற முறை எமக்கு திருப்தி அளிக்கவில்லை. அதன் நிமித்தம் நாம் வசிக்கும் இடமாகிய பேர்கனில் ஒரு போட்டியை நடாத்தினால் என்ன? என்ற கேள்வி எம்முள் எழுந்தது. விளையாட்டுகளுக்கென இங்கு கழகம் ஒன்று இருப்பதனால் கழகத்துடன் தொடர்பு கொண்டு சம்பாசணை நடத்தினோம். முதல் வருடம் நாங்களும், கழகமும் இணைந்தே போட்டியை நடாத்தினோம். பின்னர் கழகம் மட்டும் போட்டியை தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

- ஆரம்பத்தில் போட்டி நடந்ததற்கும் இப்போது



படிப்பகம்

www.padippakam.com

- தொடக்கத்தில் வெளியிலிருந்து பங்குபற்றிய அணிகள் கூடுதலாக இருந்தது. தற்போது குறைந்துவிட்டது. முன்பு இருந்த உற்சாகம், ஆதரவு தற்போது இல்லை. நடத்துனரிடமும் தவறுகள் உண்டு. ஒவ்வொரு வருடமும் ஒரே மாதிரியாக நடாத்தியதால் அது வீரர்களுக்கு புளித்த மாவாக, பழைய பல்லவியாகவே அமைந்துவிட்டது. அதுவே வீரர்களுக்கு உற்சாகத்தை குறைத்துவிட்டது. நடத்துனரிடம் போட்டியை திறமையாக நடத்தவேண்டுமென்ற நோக்கம் இருப்பதாக தெரியவில்லை. போட்டிகள் நடந்தால் போதும் என்றே கருதுகிறார்கள். இங்கு ஒழுங்கீனமும் காரணமாக வருகின்றது. கடைசியாக சில வருடங்கள் போட்டிக்கு முதல் நாள் draw பண்ணப்பட்டது. இது பெருந்தவறாகும். சாதாரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்னதாக draw பண்ணியிருக்கவேண்டும். இதை ஒரு உதாரணமாகவே குறிப்பிடுகின்றேன்.

- **துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் பங்குபற்றிவரும் சிங்கள வீரர்களையும் உள்ளடக்கிய Busy Bees அணியைப்பற்றி ஏதாவது குறிப்பிட விரும்புகின்றீர்களா?**

- ஒஸ்லோவில் நாங்கள் விளையாடும் போது Busy Bees அணி மிகத் திறமையான அணியாக திகழ்ந்து வந்தது. அவர்களுடன் முதலில் Bergen Cup பற்றிக் கதைத்தோம். தாம் ஆர்வமாக இருப்பதாகக் கூறினார்கள். அதன் அடிப்படையிலேயே அவர்களுக்கு அறிவித்தோம். போட்டி ஆரம்பமாகிய முதல் வருடத்திலிருந்து தொடர்ந்தும் Busy Bees அணி பங்குபற்றி வருகின்றது. அவர்களை பேர்கன் விளையாட்டுக் கழகமும் நல்ல முறையில் வரவேற்று வருகின்றது. அதைவிட பேர்கன் வாழ் மக்கள் தம்மாலான முழு ஆதரவையும் Busy Bees அணிக்கு அளித்து வருகின்றார்கள்.

. . . .

**பேர்கன் நகரில் உள்அரங்கப் போட்டிகள் சில ஆண்டுகள் நடைபெற்று வந்திருக்கின்றன. இப் போட்டிகளை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கமே முன்னின்று ஆரம்பித்து வைத்தது. இச்சங்க உறுப்பினர்களுள் ஒருவரான**



படிப்பகம்

www.padippakam.com

## திரு மாட்டீன் மலையமான் அவர்களுடனான நேர்காணல்.

- யாழ் சம்பத்திரிசியார் பழைய மாணவர் சங்கம் பேர்கனில் சில விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வந்திருக்கின்றன. இவை தொடர்பாக. . . .

○ பழைய மாணவர் சங்கம் பேர்கனில் 1991ம் ஆண்டில் ஆரம்பமாகியது. இது பல செயற்திட்டங்களை நடாத்த திட்டமீட்டியிருந்தது. அவற்றுள் ஒன்றுதான் உள்அரங்க விளையாட்டுப் போட்டிகள். உள்அரங்கப் போட்டிகள் நிறைய உண்டு. ஆனால் எம்மால் இயன்ற ஒரு சிலவற்றையே நாம் ஆரம்பித்தோம். chess, carrom, badminton, table-tennis ஆகிய போட்டிகளை நடாத்தினோம். இப் போட்டிகளை Fr.David கிண்ணம் என பெயரிட்டு அருட்தந்தையின் ஞாபகார்த்தமாகவே நடாத்தினோம். இதில் பேர்கனில் உள்ள பெரும்பாலான ஆண்கள் பெண்கள் பங்குபற்றினர்.

- இப்போட்டிகள் தொடர்பாக பழையமாணவர் சங்கத்திற்கும், தமிழர் விளையாட்டு கழகத்திற்கும் இடையில் எவ்வாறு உறவுகள் இருந்தன?

○ போட்டிகளை நடத்த ஆரம்பித்த போது எம்மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனால் இறுதியில் நாங்கள் ஒற்றுமையாக ஒன்றிணைந்து போட்டிகளை நடாத்தினோம். குறிப்பாக கழகத்திலே அப்போது இருந்த தலைவர், செயலாளர் ஆகியோர் முழுமையாக எம்மோடு ஒத்துழைத்தனர்.

- கடந்த இருவருடங்களாக Fr.David கிண்ணம் போட்டிகள் நடைபெறவில்லை. இது தொடர்பாக. . . .

○ ஒத்துழைப்பின்மை, தொடர்ந்தும் வருடாவருடம் ஒரு சிலரே எல்லாவற்றையும் செய்வதால் சலிப்பு ஏற்படுகின்றது. போட்டிகளை ஆரம்பித்த பழைய மாணவர்களிடமிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.




படிப்பகம்

- அப்போட்டிகளை மீண்டும் தமிழர் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கும் பட்சத்தில் நீங்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை நல்க முன்வருவீர்களா?

- நிட்சயமாக, இடைநிறுத்தப்பட்ட அப்போட்டிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்போட்டிகளினால் உள ரீதியாகவும் எமது மக்கள் வளர்க்கப்படுவர். இதற்கு என்னால் இயன்ற உதவிகளை நல்குவேன்.

*சந்திப்பு:*
*வெளியீட்டுக்குழு*



www.padippakam.com

# பந்தயக் குதிரைகள்

-தமயந்தி-

"மதியண்ணைக்கு ஒருக்கா அடிச்சுப்பாரும் வாணி வேலயால வந்திருப்பார்" கால் வலியின் வருத்த மிகுதியால் முனகியபடி படுக்கையிலிருந்து மெல்ல தன்னுடலை நிமிர்த்திச் சாய்த்துக்கொண்டே மனைவி வாணிக்கு வேண்டுதல் விடுத்தான் ராஜன். மணி பத்தாகி விட்டது. காலை பதினோரு மணிக்கு வைத்தியரைச் சந்திக்க நேரம் எடுத்திருந்தான் ராஜன். இன்னும் அரை மணி நேரம்தான் பாக்கியிருக்கிறது. அதற்கிடையில் மதியண்ணை காருடன் வந்து விடுவாரென்ற நம்பிக்கை ராஜனுக்கு. அவர் வரமாட்டாரென்பது வாணிக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

காலை ஒன்பது மணியளவில் மதியண்ணை வீட்டுக்கு வாணி ரெலிபோன் எடுத்தபோது அவரது மனைவிதான் ரிசீவ் செய்தாள். மதியண்ணை வீட்டில் இருந்துகொண்டே வேலைக்குப் போய் விட்டதாகச் சொல்லும்படி மனைவிக்குக் கூறியதை மறுமுனையில் வாணி கேட்கத் தவறவில்லை.

"மதியண்ணை என்னவாம்?" என படுக்கையிலிருந்தபடியே விசாரித்த ராஜனுக்கு மதியண்ணையின் மனைவி கூறிய பொய்யையே கூற வேண்டியவளாயிருந்தாள் வாணி. ஏனென்றால் மதியண்ணை மீது நல்ல நம்பிக்கையும் மரியாதையும் கொண்டிருந்தான் ராஜன். வருத்தமும் வேதனையும் மிகுந்த இந்த வேளையில் மதியண்ணை மீதான நம்பிக்கையிழப்பையும் கூறி மன வேதனையையும் பெருக்கமடையச்செய்ய வாணி விரும்பவில்லை. மதியண்ணையின் இந்தப்போக்கை ராஜனுக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தெளிவுபடுத்தித்தான் ஆக வேண்டும். ஆனால் அது இதுவல்ல சமயம். நோய் குணமடைந்ததும் பார்ப்போம் என்றவளாய் மவுனமானாள் வாணி.

"மதியண்ணைக்கு அடிச்சனீரேயப்பா...?" மீண்டும் கேட்டான் ராஜன். "ஓமொம், இன்னும் வேலயால அவர் வரேல்லயாம்." விருப்பின்றியே மீண்டும் மீண்டும் பொய் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தை நினைக்கையில் வாணிக்கு சங்கடமாயிருந்தது. "நேரமாப்போச்சு நாங்க ரக்ஸி அடிச்சுப் போவம் நீங்க மெல்லமா எழும்பி வெளிக்கிடுங்கோ" கூறியபடியே ராஜன் எழுந்திருக்கவும் முகம் கழுவி உடையணியவும் உதவினாள் வாணி.

ரக்ஸி வந்து வாசலில் தரித்து நிற்கவும் ராஜனை தாங்கி அணைத்தபடி வாணி வாசலுக்குக் கூட்டிவரவும் சரியாயிருந்தது. "நேரத்தோட அறிவிச்சிருந்தா வேலைக்கு லீவு போட்டிட்டு வந்திருப்பனேயெண்டு மதியண்ணை கத்தப் போறார். எண்ணண்டு அந்தாளச் சமாளிக்கிறதெண்டு தெரியேல்ல...." கூறியபடியே வாணியின் துணையோடு ரக்ஸியின் பின்னிருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான் ராஜன். மதியண்ணைமீது கணவன் வைத்திருக்கும் அபார நம்பிக்கையை வியந்துகொள்ளும் அதேவேளை அந்த நம்பிக்கை பொய்க்கும்போது கணவனுக்கு ஏற்படப்போகும் தாங்க முடியா மனத் துயரை நினைக்கும்போதுதான் வாணிக்கு மிகவும் கவலையாயிருந்தது.

ராஜனை வாணி மணந்து நான்கு வருடங்கள்தான் ஆகின்றன. ஆனால் மணமுடிக்குமுன்னால் ராஜனை எட்டு வருடங்களாகப் புரிந்து கொண்டவள் வாணி.

அது இனிமையும், சுகந்தமும் நிறைந்த கல்லூரி வசந்த காலங்கள். கல்லூரியின் விளையாட்டுக் கழகத்துக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தலைவனாகவும், சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும் ராஜன் திகழ்ந்த காலம். கல்லூரிக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணங்களால் கல்லூரியின் கண்ணாடிப் பெட்டகங்களை நிறைத்த காலம். அந்தக் காலங்களுக்கிடையில் வந்துபோன கல்லூரியின் ஆண்டுவிழாவும், அந்த ஆண்டு விழாவில் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளின் பொறுப்பாளனாய் உயர்தரக்கல்வி மாணவன் ராஜனும், கலை நிகழ்ச்சிகளின் ஒழுங்காளராய் அந்த ஆண்டின் மாணவர் தலைவி வாணியும் பொறுப்பேற்று நடாத்திய காலம்.

ஒளியேற்றல், தலைமையுரை, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புகள் போன்றவை முடிந்து, கலை நிகழ்ச்சிகளும் முடிவுறும் நேரம். "இறுதி நிகழ்ச்சியாக பாரதியாரின் நாடகத்திலிருந்து இதுவரை இசைவடிவம் பெறாத பாடலொன்று அரங்கேறுகிறது" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கையில் ஒலிவாங்கியுடன் வாணி. "வாராய் நிலவே வையத் திருவே வெள்ளைத் தீவில் விளையும் கடலே! வானப் பெண்ணின் மதமே ஒளியே வாராய்! நிலவே வா!!" உள்ளறையில் தன் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த ராஜன், பாரதியாரின் நாடகப்பிரதியொன்றில் முன்பு தான் படித்த பாடல் வாணியின் குரலில் உயிர் பெற்று உலா வந்ததைக் கேட்டு திணறித்தான் போனான். அந்தப் பாடலில் பொதிந்து கிடந்த ஓர் ஈர்ப்பு வாணியின் குரலினாலும், எவரையும் கவர்ந்திழுக்கக் கூடிய இசைக் கோர்ப்பினாலும் மேலும் மெருகேறியது. பாடல் முடிந்து மேடையைவிட்டு இறங்கி வந்த வாணியை ஓடிச்சென்று கைகுலுக்கி தன் பாராட்டைத் தெரிவிக்கத் தவறவில்லை அவன்.



படிப்பகம்

www.padippakam.com

கல்லூரிப் படிப்பின் ஆரம்ப காலங்களிலிருந்து கீரியும் பாம்புமாய் எதிரும் புதிருமாயிருந்த வாணியும் ராஜனும் நண்பர்களானது நட்பின் வளர்ச்சி காதலர்களென்ற அந்தஸ்த்துக்கு அவர்களை உயர்த்தியது அந்தக் கல்லூரிக் காலமும், அந்தப் பாரதியார் பாடலும்.

"எந்தக் கஷ்டத்தயும் தாங்குவன் ஆனால் நான் நிறய நம்பிக்க வச்சிருக்கிற ஆக்கள் பொய்யாப் போறபோதுதான் என்னால தாங்கேலாமல் இருக்கும்" கல்லூரிக் காலங்களில் இவை அடிக்கடி ராஜன் சொல்லிக் கொள்பவை. அதனை உறுதிப் படுத்துவதுபோல் அந்த சம்பவம். மணிவண்ணன். ராஜனின் சிறுபிராய முதலான ஸ்நேகிதன். மணிவண்ணனின்றி ராஜனையோ, ராஜனின்றி மணிவண்ணனையோ காண்பதரிது என்ற நிலையிலான அதே கல்லூரிக்காலம். ராஜனுக்கு வாணிபோல், மணிவண்ணனுக்கு சுகந்தினி. மணிவண்ணனின் காதலை ஏற்றுக்கொள்ள முதலில் சுகந்தினி தயக்கம் காட்டினாள். "சுகந்தினி இல்லாத வாழ்க்க சத்தியமா எனக்குத் தேவயில்ல மச்சான்" என்ற மணிவண்ணனின் வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்க நண்பன் ராஜன் களத்தில் இறங்கினான். சுகந்தினிக்கு எதையெதையெல்லாமோ சொல்லி மணிவண்ணணின் காதலை ஏற்றுக் கொள்ளச் செய்தான்.

கல்லூரிக் காலங்களைத் தொடர்ந்து ராஜனும் வாணியும் மணிவண்ணனும் கலைப்பீட மாணவர்களாய் யாழ் பல்கலைக்கழகப் பிரவேசம். சுகந்தினிக்குக் கிடைக்கவில்லை. கல்லூரிப் படிப்பையும் தொடர முடியாமல் குடும்ப சூழ்நிலை. படிப்புக்கு முற்றுப்புள்ளி.

கலைப்பீட மாணவனான இரண்டாம் வருடத்திலேயே மணிவண்ணனுக்கு புதிய காதலி. இதனை ஜீரணிக்க முடியாதிருந்தது ராஜனுக்கு. சுகந்தினியின் நிலை தொடர்பாக



படிப்பகம்

www.padippakam.com

மணிவண்ணனுடன் எவ்வளவோ பேசிப் பார்த்தான். எல்லாமே பலனற்ற முயற்சியும், முடிவும். "ஸ்டேட்டஸ்" போன்ற பதங்கள் மணிவன்ணன் வாயிலிருந்து உதிர்ந்ததை ராஜனால் ஜீரணிக்க முடியாதிருந்தது. "நீயொரு பச்சோந்தியடா" என மட்டுமே சொல்லிவிட்டு மணிவண்ணனின் மொத்த நட்புக்கும் முழுக்குப் போட்டுக் கொண்டான். ஆனாலும் மணிவண்ணன் மீதான நம்பிக்கைச் சிதைவினால் ஏற்பட்ட மனச்சோர்வை அவனால் மறைக்க முடியவில்லை. வாணியிடம் பல தடவை சொல்லிச் சொல்லி வருந்தியிருக்கிறான். ஊரில் நண்பன் மணிவண்ணன் ஏற்படுத்திய மனத் தாக்கத்திலிருந்து மீளமுன்பு இப்போது இங்கு புதிதாய் மதியண்ணை.

ரக்ஸி வைத்தியசாலை முன்பாகத் தரித்தது. மீட்டருக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டு, வெள்ளைக் காரோட்டியின் நன்றியைப்பெற்று, பதிலுக்கு தானும் ஆயிரம் நன்றிகளை அள்ளி அவனுக்குக் கொடுத்துவிட்டு, ராஜனைக் கைத்தாங்கலாகக் கூட்டிக்கொண்டு வைத்திய சாலையினுள் நுழைந்துகொண்டாள் வாணி. முன்பு கூறியதையே திரும்பவும் வைத்தியர் கூறினார். ஆனால் இந்தமுறை மிகமிக எச்சரித்துக் கூறினார். "இனிமேல் பந்து விளையாடவோ, ஓடவோ கூடாது. வலதுபாத மொழி விலகிக்கொண்டது மட்டுமல்ல, தொடர்புநார் இளையமும் பழுதாகி விட்டது. பந்து விளையாடுவதை இனி மறந்துவிட வேண்டியதுதான். தற்போதைக்கு நடந்து திரியாமல் வீட்டில் இரண்டு வாரம் ஓய்வெடுப்பது மிகமிக முக்கியம். சிகிச்சை தொடரும்" வைத்தியரின் எச்சரிக்கையுடன் வீடு திரும்பினர் மீண்டும் ரக்ஸியில்.

ராஜன் நோர்வேக்கு வந்த புதிதிலிருந்தே அவன் வதிவிடமாக்கிக் கொண்ட நகரப் பகுதியில் தமிழர் தமக்காக உருவாக்கிய விளையாட்டுக் கழகம் இயங்கிக் கொண்டுதான்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. ராஜனுக்கும் அதில் இணைந்து விளையாட வேண்டுமென்ற ஆர்வம் இருக்கத்தான் செய்தது. கழகம் வருடா வருடம் ஒழுங்கு செய்து நடாத்தும் அகில நோர்வேவாழ் தமிழர்க்குமான விளையாட்டுப் போட்டிகளில் தமிழர்களுக்கே உரிமையான ஊர்வாதங்களை உள்ளடக்கிய அடிபாடுகளும், கடிபாடுகளும் இடம்பெறாத வருடமே இல்லையெனலாம். விளையாட்டுக் கழகங்கள் ஏன் உருவாக்கப் படுகின்றன, விளையாட்டுப் போட்டிகள் ஏன் நடாத்தப் படுகின்றன என்ற தார்ப்பரியங்களை இழந்து, "சேரனின் பூட்டர்கள் நாம், சோழரின் பேரர்கள் நாம், பாண்டியனின் வாரிசுகள் நாம், பகைவன் படையைப் பந்தாடுகிறோம்பார் வேலும், வில்லும், வாளும் ஏந்தி..." எனும் பாணியில் தம்மைப் பெரும் பேரரசுகளாய் எண்ணி, விளையாட்டுக் களத்தைப் போர்க்களமாய் மாற்றிக் கொள்ளும் சம்பவங்களே தொடராய் நடந்து கொண்டிருந்தன. இதன்பால் ஏற்பட்ட வெறுப்பும் சகிப்பின்மையுமே ராஜனை விளையாட்டுக் கழகத்தின் பக்கம் போக விடாது பண்ணியது.

ராஜன் நோர்வேக்கு வந்த இரண்டு வருடத்தில் வாணியும் வந்து சேர்ந்து விட்டாள் மணமுடிப்பு விசாவில். அந்தக் காலத்திற்தான் விளையாட்டுக் கழகத்தின் தலைவராய் மதியண்ணை பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் பொறுப்பேற்றுக் கொண்டபின் எந்தச் சண்டை சச்சரவுகளும் விளையாட்டுப் போட்டிகளின்போதோ, அல்லது கழக விழாக்களின்போதோ ஏற்பட்டது கிடையாது. "விளையாட்டக் கழகத்தில் இணைந்தாலென்ன?" என ராஜன் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள் "ராஜன் நல்லதொரு கால்ப்பந்தாட்ட வீரன்" என அறிந்துகொண்ட மதியண்ணை ராஜனுடன் தானாகவேவந்து நேரடியாகத் தொடர்பு கொண்டார். அப்போது இணைந்து கழகத்துடன் செயற்படத் தொடங்கியவன்தான் ராஜன். கிட்டத்தட்ட இப்போது நான்கு



படிப்பகம்

www.padippakam.com

வருடங்களாகின்றன.

இந்தவருட கோடைகால விளையாட்டுப் போட்டிகளின்போதுதான் ராஜனின் வலதுகாற்பாதம் புரண்டது. வைத்தியரிடம் காண்பித்து "சிலநாள் ஓய்வு தேவை" என்ற வைத்தியரின் ஆலோசனையோடு வீடு திரும்பிய ராஜன் மறுநாள் வெளிமாவட்டக் கழகமொன்றுடன் போட்டிக்குப் போய்விட்டான். முதலில் ராஜன் மறுத்தபோதும், "ராஜன் நீரில்லாத டீம் போய்ப் பிரியோசனமில்ல. அப்பிடியண்டால் கான்சல் பண்ணுவம்" என்ற மதியண்ணை கூறியதைக் கேட்டதும், "வேண்டாமண்ண நான் வெளிக்கிடிறன் டீம் கொண்டுபோவம்" என சம்மதித்துப் புறப்பட்டான். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடுமென்ற பழமொழிபோல் ராஜனின் வலதுபாதத்தில் மீண்டும் அடி. இப்போது விளையாட்டையே மறந்துவிட வேண்டுமென்பது வைத்தியரின் கறாரான கட்டளை.

ரக்ஸி வீட்டு வாசலில் தரித்தது. ராஜன், வைத்தியர் வழங்கிய கைத்தடி ஒருபுறமும், வாணியின் கைத்தாங்கல் மறுபுறமுமாய் துணைகொள்ள தன்படுக்கையில்சென்று மீண்டும் சரிந்தான்.

சில வாரங்களின்பின் விளையாட்டுக் கழக உறுப்பினனான நந்துவின் திருமண வைபவத்திற்கு ராஜனும், வாணியும் சென்றிருந்தனர். ராஜனைப்போல் நந்துவும் நல்ல விளையாட்டு வீரன். சுபநேரம் வந்து தாலி கட்டி முடிந்து, மணமக்கள் தங்களுக்குள் பண்டமாற்றுச் செய்ய வேண்டிய சம்பிராதயங்களை ஐயர், மற்றும் சபைப் பெரியோர்களின் துணையோடு செய்து முடித்து, (ஊரில் செய்யக் கண்ட சில சம்பிரதாயங்கள் இங்கு சில முன்னுக்குப் பின்னாய், ஆனால் ஒன்றுவிடாமல்) பெண்ணும் மாப்பிள்ளையும் மாறிமாறிக் கண்ணாடியில் முகம் பார்த்து, பிளாஸ்டிக் வாளிக்குள்ளிருந்த தண்ணீருக்குள் ஐயர் போட்ட மோதிரத்தை



படிப்பகம்

www.padippakam.com

இருவருமாய் போட்டிபோட்டுத் தேடியெடுத்து, (அதற்குள் ஐயர் மோதிரத்தை வாளிக்குள் போடுவதாய் பாவனை செய்து கைக்குள்ளேயே மோதிரத்தை வைத்திருக்க மணமக்கள் தேடிப்பார்த்து ஏமாந்துபோக என தனக்குத் தெரிந்த ஒரு வித்தையைக் காட்டி மணமக்களை ஏமாற்றி கூடி நின்றோரை தன் பங்குக்கு ஐயர் சிரிக்க வைத்து) வீடியோக் காரனின் கண்களுக்குள் அகப்படாமல் தப்பித்துப்போன சம்பிரதாயங்கள் மீண்டும் படப்பிடிப்புக்காக மணமக்களால் "வன்ஸ்மோர்" செய்து காட்டப்பட்டு, புகைப்படப் பிடிப்பாளனின் தொழிலுக்கு, வீடியோப் படப் பிடிப்பாளனின் "பவர்ஃபுல்" வெளிச்சம் இடைஞ்சல் செய்கிறதென அவர்களுக்குள் ஒருவரையொருவர் பிடுங்குப்பாடுபட்டு, பின்னொரு சமரசத்துக்கு வந்து, இப்படி கல்யாணத் திருக்கோலங்களைக் கண்டு களித்து, அடுத்து வரப்போகும் விருந்துவைபவ நிகழ்ச்சிக்கிடையில் கிடைத்த சிறு இடைவேளையை சுகநேரமாய் நினைத்து நல்ல காற்றில் சிறிது சுவாசிக்கலாமென் ஒற்றை ஊன்றுகோலின் துணையோடு கல்யாண மண்டபத்தை விட்டு வெளியே வந்தான் ராஜன்.

"என்ன மதியண்ண! இப்ப நந்துவின்ர பக்கம் காத்தடிக்குதுபோல கிடக்கு?"

"நந்துவுக்கு ஒண்டெண்டால் விழுந்தடிச்சுச் செய்யிறியள், ராஜன இப்ப கைகழுவி விட்டாச்சாக்கும்"

"தம்பிமாரே! பந்தயத்தில ஓடுற குதிரைக்குத்தான் ராசாக்கள் கொள்ளும் புல்லும் வைக்கலாம். நொண்டிக் குதிரய வச்சுத் தீனிபோட்டு என்ன பயன்...?"

கல்யாணமண்டபக் கோடிப்புர மரத்தின்கீழ் தம்மடித்துக்கொண்டு நின்ற சில இளசுகளின் மத்தியில்,



படிப்பகம்

www.padippakam.com

இளசுகளின் சம்பாஷணைக்கு மதியண்ணை கொடுத்த பந்தயக்குதிரை விளக்கம் பின்னால் வந்துகொண்டிருந்த ராஜனின் செவிகளில் கந்தகக் குண்டாய்ப் பாய்ந்தது. சம்மட்டியால் நெஞ்சில் ஓங்கி அறை விழுந்ததுபோல் ஒருகணம் திணறிப்போனான் ராஜன்.

ராஜனைக் கண்டதும் கூட்டத்தின் சம்பாஷனை திசை திரும்பி, நோர்வேயின் புதிய பிரதமர் பற்றியும், அவர் தனது மந்திரிசபைக்கு தெரிவுசெய்துகொண்ட உறுப்பினர்கள் பற்றியும் விவாதங்களானது.

திருமணக் கொண்டாட்டம் முடிந்து வீடு திரும்பிய ராஜன் எதுவுமே பேசாது சோபாவில் அமர்ந்து யோசித்தபடியிருந்தான். கல்யாண மண்டபத்தில் ஏதோ ராஜனுக்கு நேர்ந்துவிட்டதென்பதை கொண்டாட்டடம் முடிந்து வரும் வழியிலேயே புரிந்துகொண்டாள் வாணி. உடனே விசாரித்தறிவது புத்திசாலித் தனமல்ல. கொஞ்சம் ஆறட்டுமெனப் பொறுமையாயிருந்தவள் சூடான தேனீர் கோப்பையை ராஜனின் கையில் கொடுத்தவாறே கேட்டாள் “சரி இனிச் சொல்லுங்கோ கலியாணவீட்டில என்ன நடந்ததெண்டு....” ராஜனின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

வாணியின் விழிகளையே ஏக்கமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு “வாணி! ஆர நம்பிறது, ஆர நம்பாமல் விடுகிறதெண்டு தெரியமால்க் கிடக்கம்மா... மற்றாக்கள்ள பிழயா...?, அல்லது எங்களின்ர வாழ்க்க முறயில பிழயா எண்டும் தெரியேல்ல... அல்லது நம்பிறதுமாதிரி நடிக்கிறதுதான் மனுசவாழ்கயா எண்டதும் தெரியேல்ல... மதியண்ணயும் இப்பிடி....” மேற்கொண்டு வார்த்தைகள் அவனுதடுகளைவிட்டு வெளிவரவில்லை. கண்கள் கலங்கின. தேம்பி அழத் தொடங்கினான். கல்யாணவீட்டில் நடந்திருக்கக்கூடிய



படிப்பகம்

www.padippakam.com

சம்பவத்தை ஓரளவு ஊகித்துக்கொண்டாள் வாணி.

“இதென்னயிது சின்னப்பிள்ள மாதிரி... சீ... எங்கட மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நாங்க வாழுறம். அது போதும். ஒவ்வொருத்தரும் தங்கட தங்கட நடத்தயள ஆராஞ்சு, சரிபிழயளத் திருத்தினாத்தான் உண்டு. திருந்திறியளோ இல்லயோ எண்டு நாங்க ஒவ்வொருத்தரோடயும்போய் மல்லுக்கு நிக்கேலாது. அது தனிச்சு முடியிற காரியமுமில்ல. நீங்க வீணா உங்கள அலட்டிக் கொள்ளுறதில ஒரு பிரியோசனமுமில்ல” வாஞ்சையோடு தன் கணவனின் கன்னங்களை வருடி முத்தமிட்டாள். அவளது நிதானமும், பரிவும் நிறைந்த வார்த்தைகளாலும், அக்கறையும், அன்பும் நிறைந்த அரவணைப்பு, முத்தங்களாலும் மனவேதனைகளை மறக்க முயற்சித்தான் அவன். அவனுள் புதிதாய் துளிர் விட்ட ஏதோவோர் வைராக்கியத்தின் வெப்பத்தில் விழிகள் சிந்திய நீர் காய்ந்து செத்துக்கொண்டிருந்தது.

. . .   . . .   . . .





படிப்பகம்

www.padippakam.com

# பெண்களும் விளையாட்டும்

விஜிநரேஷ்

“பெண்களே உலகின் கண்கள்” என்று பசப்பு வார்த்தைகள் கூறி நிற்கும் உலகம், ஏட்டளவில் மட்டும் பெண்களைப் பற்றி பாட்டிசைக்கும். இந்தக் கண்ணான பெண்கள் கண்ணாம்பூச்சி விளையாட்டிலிருந்து, ஊஞ்சலாடி, தொடர்ந்து விளையாடினாலும் ஆண்களின் விளையாட்டுப் பொம்மைகளானார்களே தவிர விளையாட அவர்களுக்கு நேரம் ஏது? என நாம் வினா எழுப்பலாம். இது ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றே.

ஆயினும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எம் இன மங்கையர் ஒரு சில விடயங்களில் உரிமையுடையோராய் வாழ்கின்றனர் என ஒப்புக் கொள்ளலாம். இதில் விளையாட்டும் ஊர் அம்சமாகின்றது. அதுவுமன்றி உடலை சீராக்கி, சமநிலையாக நோயின்றி வாழ விளையாட்டு அல்லது உடற்பயிற்சிக்கேற்ற வேறு வகையான செயற்பாடுகள் தேவை என்பதும், பெண்கள் தம் அறிவின் செறிவால் ஆய்ந்து உணர்ந்துள்ள ஓர் சிறந்த முடிவாகும்.

நோர்வேயில் வாழும் பெண்களைப் பொறுத்த வரை இளம் பெண்களே விளையாட்டைப் பெரிதும் விரும்பி ஓய்வு நேரங்களில் பயிற்சிகள் செய்கின்றனர். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது அதில் பங்குபற்றி பரிசில்களும் பெறுகின்றனர். இதற்கு பெரிதும் உறுதுணையாக இருப்பவை அவ்வப்பகுதிகளில் உள்ள விளையாட்டு கழகங்கள் ஆகும். பேர்கனைப் பொறுத்த வரை பேர்கன் தமிழர் விளையாட்டுக் கழகம் ஹோடலாண்டில் சிறந்த விளையாட்டுக் கழகம் என பெயர் பெற்றது மட்டுமல்ல, மங்கையரையும் ஊக்குவிக்கும் மாபெரும் கழகமாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

இதற்கு அத்தாட்சியாக பெண்கள் தம் ஓய்வு நேரங்களில் விளையாடிப்



படிப்பகம்

www.padippakam.com

பயிற்சி பெறத் தன்னாலான ஒத்துழைப்பை இக்கழகம் வழங்கியமையைக் குறிப்பிடலாம். முதலில் புனித பவுல் பாடசாலையிலும் பின்னர் லோவோஸ் பாடசாலையிலும் பிரதி வெள்ளிக் கிழமையும் மாலை ஆறு மணி தொடக்கம் ஏழரை மணி வரை பெண்கள் விளையாட்டுப் பயிற்சி பெற்றனர்.

மாலை நேரத்தில் மகிழ்வான ஓர் சந்திப்பாகவும் அதே நேரம் உடலை சமச்சீராகவும், சௌக்கியமாகவும் வைத்துக் கொள்ளவும் உதவ பணச் செலவின்றி பயிற்சி பெறும் வாய்ப்பு பெண்களுக்கு கிட்டியது. ஆனால் இதனைப் பயன்படுத்திக் கொண்டோர் எத்தனை பேர் என்பது தான் கேள்விக் குறி. ஆறு வயதுச் சிறுமி முதல் அறுபது வயது மூதாட்டி வரை அந்த விளையாட்டுப் பயிற்சியில் பங்குபற்றியிருந்தாலும் கூட பேர்கனில் வாழும் பெண்களில் கால்வாசிப் பேர்கூட அவ்விளையாட்டில் கலந்து கொள்ளவில்லை. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

அன்றிலிருந்து இன்று வரை ஆண்கள் பெண்களை அடக்கி வாழவே விரும்புகிறார்கள். இதனை ஓர் சிறு உதாரணம் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த ஆண்டு கோடைகால விளையாட்டில் முதியோருக்கான ஓட்டப் போட்டி நடைபெற்றது. ஐம்பது வயதிற்க்கும் அறுபது வயதிற்க்கும் இடைப்பட்ட ஆண் பெண் பங்குபற்றினர். இதில் ஓடிய ஆணிற்கு எவ்வித ஆட்சேபனையும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பெண்களைப்பற்றி *"இவைக்கு ஏன் இந்த தேவையில்லாத வேலை"* என்று பல ஆண்கள் கேலியாக கூறி சிரித்ததாக என் நண்பி ஒருவர் என்னிடம் கூறி வருத்தப்பட்டார்.

பெண்களாகிய நாம் மேலும் மேலும் ஏமாளிகளாகி விடக்கூடாது. எங்களுக்கு கிடைக்கும் சலுகைகள், உரிமைகள் ஆகியவற்றை பயன்படுத்த ஒருபோதும் தவறிவிடக் கூடாது. கடமைகளில் கருத்தாயிருக்கும் அதே வேளை உரிமைகளை அனுபவிக்கத் தயக்கமேன்?

மாலை முழுதும் விளையாட்டு
இதை வழக்கப் படுத்திக் கொள்ளு—பாப்பா



படிப்பகம்

www.padippakam.com

என அன்று பாடினான் மகாகவி பாரதி. பாப்பா என்ற சொல் பெரும்பாலும் குறிப்பது பெண் குழந்தையைத் தான். ஆனால் பெண்களாகிய நாங்களோ ஆண்களை விளையாட விட்டு 'ஆ' வென்று வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். முன்னேறிய மேல் நாடுகளில் வாழும் நாம் அந்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தையும், முயற்சியையும் கண்டு பிரமிக்கின்றோமே தவிர, எம்மாலும் முன்னேற முடியும் என்று எள்ளளவும் சிந்திப்பதில்லை.

காற்பந்தும், கைப்பந்தும், கிரிக்கட்டும், டெனிசும் ஆண்களுக்கு மட்டும் உரியவை அல்ல. அவை பெண்களுக்கும் ஏற்ற பெருமை தரும் விளையாட்டுக்களே. மங்கையராகப் பிறப்பதற்க்கே மாதவம் செய்தல் வேண்டும். இத்தகைய பெருமை பெற்ற பெண்கள் நாம், விளையாட்டிலும் எங்கள் பெருமையைக் காட்ட வேண்டாமா?
விளையாட்டு மனதுக்கும், உடலிற்கும் மகிழ்வையும் புத்துணர்வையும் ஊட்டுகிறது. வெற்றி தோல்வியைச் சமமாக எண்ணும் மன உறுதியை தருகிறது. அகிலத்திற்கு ஆணி வேராக இருக்கும் நாம் மன மகிழ்வுடனும் மன உறுதியுடனும் வாழ உதவும் சிறந்த சாதனம் விளையாட்டு. எனவே எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி உடல், உள உறுதி பெறுவோம். உத்தம சந்ததியை உருவாக்குவோம்.

. . .   . . .   . . .





படிப்பகம்

www.padippakam.com

# ஒலிம்பிக் போட்டிகளும் சரித்திர நிகழ்வுகளும்

பண்டைய காலத்தில் கிரேக்க நாட்டில் ஒலிம்பியா என்ற இடத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்தன. ஒலிம்பியாவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்கள் ஒலிவ் மரக்கிளைகளினாலான கிரீடங்கள் சூட்டப்பட்டு, கௌரவிக்கப்பட்டதாக சரித்திரங்கள் கூறுகின்றன. இதன் ஞாபகமாகவே இவை ஒலிம்பிக் போட்டிகள் என அழைக்கப்பட்டு வருகின்றன.

நாடுகளுக்கிடையில் சமாதானத்தையும், ஒருமைப்பாட்டையும், வீரர்களுக்கிடையில் ஒழுக்கம், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் தனது சின்னக்கொடியிலும் அவற்றையே வலியுறுத்தி நிற்கின்றன.

ஐந்து கண்டங்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்ததற்கு அறிகுறியாக ஐந்து வளையங்கள் பிணைக்கப்பட்டு வெள்ளை நிறத்தளத்தில் மஞ்சள், பச்சை, கறுப்பு, நீலம், சிவப்பு வளையங்கள் ஒன்றோடொன்று இணைந்த வண்ணம் காணப்படுகின்றன.

மஞ்சள்-ஆசியா, பச்சை-அவுஸ்திரேலியா, கறுப்பு-ஆபிரிக்கா, நீலம்-ஐரோப்பா, சிவப்பு-அமெரிக்காக் கண்டங்களை குறிக்கின்றன. ஒலிம்பியா நகரின் ஒரு பகுதியான டெல்ஃபியில் கற்றூணில் பொறிக்கப்பட்டிருந்த ஐந்து வளையங்களை ஆதாரமாகக் கொண்டே ஒலிம்பிக் கொடி வடிவமைக்கப்பட்டது. இது 1914ம் ஆண்டில் பாரிசில் நடைபெற்ற மாநாட்டில் கூபேர்ட்டின் யோசனையின்படி அங்கீகரிக்கப்பட்டது.

முதல் ஒலிம்பிக் போட்டி 1896ம் ஆண்டில் கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெற்றது. இங்கு மெய்வல்லுனர், மல்யுத்தம், நீச்சல், பளுதூக்குதல், டெனிஸ், குறிபார்த்து சுடுதல், வாட்போர், உடற்கலை



படிப்பகம்

www.padippakam.com

சாகசம், சைக்கிள் ஓட்டம் ஆகிய ஒன்பது நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவை படிப்படியாக உயர்ந்து 1996ல் 28 அம்சங்களில் 271 நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கூபேர்ட்டின் பிரேரணையின்படி இரண்டாவது ஒலிம்பிக் போட்டிகள் 1900ம் ஆண்டில் பாரிஸ் நகரில் நடைபெற்றது. இவ்வேளையில் உலகக் கண்காட்சியும் பாரிசில் இடம் பெற்றது.

1904ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள சென்ட் லூயிஸ் நகரில் மூன்றாவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. 1908ம் ஆண்டில் லண்டனில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளின்போது ***"ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுவதல்ல பங்குபற்றுவதே முக்கியம் வாழ்கையில் வெற்றிக் களிப்பில் ஆர்ப்பரிப்பதல்ல எவ்வாறு எதிர் நீச்சல் போடுகிறோம் என்பதே முக்கியம்"*** என்ற போதனை வீரர்களுக்கு பென்சில்வேனிய ஆயர் ஈதல்பர்ட்டல்பொட் அவர்களால் வழங்கப்பட்டது.

1912ல் ஐந்தாவது ஒலிம்பிக் போட்டிகள் சுவீடனிலுள்ள ஸ்ரொக்கொல்ம் நகரில் நடைபெற்றன. இங்கு தான் மின்னியக்க நேரக்கணிப்பு அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டது. முதன் முதலாக ஒலிபெருக்கி மூலம் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டதும் இங்கே தான்.

முதலாம் உலகப் போரின் காரணமாக 1916ல் நடை பெறவேண்டிய ஒலிம்பிக் போட்டி ரத்து செய்யப்பட்டது. பெரும் போரின் பின்பு 1920ம் ஆண்டில் பெல்ஜியத்தில் உள்ள அன்ற்வேர்ப் நகரில் போட்டிகள் ஆரம்பமானது. இங்கு முதன் முதலாக ஒலிம்பிக் கொடி பாவிக்கப்பட்டது. போரின் காரணமாக போட்டியில் பங்கு பற்ற வேண்டிய சில நாடுகள் பங்குபற்றவில்லை. 1924ல் மீண்டும் பாரிசில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. 1928ல் அம்ஸ்ரர்டாமிலும் 1932ல் அமெரிகாவிலுள்ள லொஸ் ஏஞ்சல்சிலும் போட்டிகள் நடைபெற்றன. 28 வருடங்களின் பின்பு இரண்டாவது தடவையாக அமெரிக்காவில் நடைபெற்ற போட்டியே இதுவாகும். இங்கு வீரர்களின் பயணக் களைப்பை காரணம் காட்டி பல நாடுகள் பகிஷ்கரிக்க எண்ணியது. இவ்வேளையில் அமெரிக்கா ஒலிம்பிக் கிராமம் ஒன்றையே அமைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

of heart, which is free from prejudice, hatred, pride and crookedness. It is who has his emotions under controll, who is noble can become a true Sportsman.

In conclussion it will give the sports participants, moral encouragement, if the community be present, whenever time permits ladies and children too at such places can make it a happy atmosphere.

*An admirer of the community*



படிப்பகம்

www.padippakam.com

நோர்வே தமிழ்ச்சங்கம்
TAMIL SANGAM I NORGE

# ஆசியுரை !

முதற்கண் தனது 10வது ஆண்டு நிறைவு விழாவினை வெற்றி கரமாகக்கொண்டாடும் பேர்கன் தமிழ் விளையாட்டுக்கழகத் தினை வாழ்க வாழ்க என வாழ்துவதில் நோர்வேதமிழ்ச்சங்கம் பேருவகைகொள்கிறது.

புலம் பெயர் வாழ்வில்,தனிநபர் ஒருவரின் வாழ்வினை நிகழ்த்துவதே இன்னல் நிறைந்ததாக இருக்கின்றபோது,ஒரு விளையாட்டுக்கழகத்தினை 10ஆண்டுகள் வெற்றிகரமாக நடாத்துவது என்பது இலகுவான விடையமல்ல.

எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் இன் நன் முயற்சியை மேற்கொள்ளும் பேர்கன் தமிழ் விளையாட்டுக் கழகத்தினரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இனியும் எத்தனை இன்னல்கள் வந்தாலும் எல்லா வற்றையும் இன்முகத்துடன் எதிர்கொண்டு இன்னும் பல்லாண்டுகள் இக்கழகம் நீடு வாழ எல்லாவகையான அனுகூலங்களும் அமைவதாகுக.

தங்கள் கழகத்திற்கு ஆசியுரை வழங்கக் கிடைத்த சந்தர்பத்தையிட்டு தமிழ்ச்சங்கம் பெருமை கொள்வதுடன், இச்சந்தர்பத்தை வழங்கிய தங்கள் கழகத்திற்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றது.

வாழ்க பேர்கன் தமிழ் விளையாட்டுக் கழகம்.

வாழ்க தமிழ்.

P.O.BOX 88 ROMSAAS; 0907 OSLO - 9 Bankgiro: 5017 10 31254



படிப்பகம்

www.padippakam.com

MANN OVER 35 ÅR:

Hva blir din pensjon?

*Få svar i dag!*

RING 55 17 80 90
Rosenkrantzgt. 3
5020 Bergen

VITAL
vi satser på livet

ÆRLIG SVAR



படிப்பகம்

Service Partner as

- en servicebedrift innen renhold og vedlikehold

SPESIALISTER I INNEKLIMA

- Daglig renhold
- Smussanalyse / støvkontroll
- Klima / Miljøteknikk
- Ad hoc-bistand
- Renholdsplanlegging
- Statisk kontroll
- Miljørehabilitering
- Totalprosjekter

**Telefon: 55 20 17 00**
Telefax..........................55 20 18 60
Mobiltelefon ..................945 66 650

MEDLEM: NHO SBL

GODKJENT AV: REN UTVIKLING

- totalleverandør av renhold



MMC Autorisert regnskapsfører kontor

REGNSKAP • BEDRIFTSRÅDGIVNING • FINANS • FORSIKRING

MMC - ET SIKKERT VALG MED TANKE PÅ DIN FREMTID:

✓ ALT PÅ ETT STED
✓ SPESIALKOMPETANSE
✓ DU SPARER TID OG PENGER
✓ BRED ERFARING MED GODE RESULTATER

*Ring oss i dag for et uforpliktende møte*
*En samtale med oss kan bli lønnsom for deg!*

Macro & Micro Company A/S, Vetrlidsalm. 5 - 5014 Bergen
Tlf. 55 32 18 20 - Telefax 55 31 10 01

www.padippakam.com

BYENS STØRSTE OG BESTE UTVALG I

HAGLER, JAKTRIFLER OG KIKKERTSIKTER!

VÅPEN-SØILEN

FINNEGÅRDSGATEN 6 - TLF. 31 49 36 - 32 44 33, 5003 BERGEN

Praktiske-populære jule-gaver til gamel og ung!

Fiskesett - stenger og sneller, garn - liner - snører - ruser - teiner og det du ellers trenger til fisket!

Velkommen til en hyggelig handel

CAMPELEN

S KROHN - HANSEN

Strandkaien 2 - Tlf. 55 32 34 72





படிப்பகம்

www.padippakam.com


# amerie as

**tradisjonelt håndverk og moderne design**
**utvalgte merkevarer og produsenter**

**Vi har godt utvalg i strikkevarer, sølv, emalje, glass, krystall og souvenirer.**

**Gave- og souvenirforretning i Finnegårdsgaten 6, rett bak Hanseatisk Museum.**
**Tel: 55 31 18 20 Fax: 55 31 24 60**



**Speil & Ramme a/s**

OVREGT. 4. 5003 BERGEN
TELEFON 55 31 39 49
TELEFAX 55 31 46 46

RF
Medlem av PPFA
Rammebransjeforbundet
i Norge

*Glassmester Kåre Hole*

***Kunst er investering, vær derfor nøye med INNRAMMINGEN.***

*Vi utfører all innramming på eget verksted etter internasjonale regler.*

***Velkommen til oss med din kunst***

***Åpningstider:***
**Mandag - fredag: 08.30 - 16.30**
**Torsdag: 08.30 - 19.00 - Lørdag: 09.30 - 14.30**




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்